**OP (LAOP) 48 of 2022**

Date : 27.01.2026.

எ.சா.1 : சேகர்

எ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

நான் 1ம் எதிர்மனுதாரரின் பவர் ஏஜென்ட் என்றால் சரிதான். விஜயநாராயணம் கிராமம் புல எண்.1003B/3 நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எந்த காரணத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் Highway Extention செய்வதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்தார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்யும் சமயம் மேற்படி புல எண் சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரருக்கு இடையே உரிமையியல் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். நான்குநேரி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரர் OS 24/2014 என்ற வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் மேல் நான்குநேரி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல்செய்யப்பட்டு AS 56/2020 அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். மேல்முறையீட்டு வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்ற தீர்ப்பின் பேரில்தான் மேற்படி தொகையை கேட்கிறேன் என்றால் சரிதான். மேற்படி AS 56/2020 தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.